1978 மார்ச் 9]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நெருக்கடி நிலைமைகாலத்தில் இம்மாதிரியான நூல்கள் எந்தெந்த நூல்கள் அரசு நூலகங்களிலிருந்து அகற்றப்பட்டன ? அப்படி அகற்றப் பட்ட நூல்களில் எவை எவை மீண்டும் அனுமதிக்கப்பட்டிருக் கிறது என்று அறிய இயலுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போட்டால் அது இயலும்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தமைத்தல்.

*473 வினா— திரு. எஸ். ஜே. இராமசாமி, திரு. என். கிட்டப்பா, திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தமிழ்நாட்டில் பெரிய ஒன்றியங்களிலுள்ள ஊராட்சிகளை சிறிய ஒன்றியங்களுடன் இணைக்கும் திட்டம் எத்தனை ஒன்றியங் களில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இதுபோன்ற செயற் குறிப்புகள் எதுவும் இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, நமது தமிழ்நாட்டில் சில ஒன்றியங்கள் பல ஊராட்சிப் பகுதிகளை உள்ளடக்கிய ஒன்றி யங்களாக அதாவது 60க்கு மேற்பட்ட ஊராட்சிகளை உள்ளடக்கிய தாகவும், சில ஒன்றியங்கள் 25, 30 ஊராட்சி மன்றங்களை உள்ளடக்கியதாகவும் இருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். அந்த நிலையை மாற்றி கிட்டத்தட்ட, பொதுவாக சிறிய அளவில் வித்தியாசம் இருக்கக்கூடிய நிலையிலுள்ள ஊராட்சி ஒன்றியங்க ளாக இனியேனும் மாற்றியமைப்பதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அவ்வாறு திருத்தி அமைக்க வேண்டுமென்ற கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது. திருவரங்கம், மோகனூர், அறந்தாங்கி போன்ற பஞ்சாயத்து ஒன்றியங்கள் திருத்தியமைக்கப்படுகின்ற கருத்து அரசின் ஆய்வில் இருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நாகை பஞ்சாயத்து யூனியன் 54 பஞ்சாயத்துக்கள் கொண்டதாக இருப்பதாலும், அது ஒரு கடைமடைப் பகுதியாக உள்ள பஞ்சாயத்து யூனியனாக இருக்கின்ற காரணத்தினாலும், அட்மினிஸ்ட்ரே ஷன் முறைப்படி நடத்தப்பட முடியவில்லை. ஆகவே, இருக்கிற

பஞ்சாயத்து யூனியனை டிஸ்ட்ரிக்ட் டெவலெப்மெண்ட் கவுன்சில் இதை இரண்டாகப் பிரிப்பது என்று ஒரு ரெகமண்டேஷனை, சிபார்சை செய்திருக்கிறது. இந்த சிபார்சு பற்றி கனம் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்தப் பரிந்துரை அரசுக்கு வருமானால் அதுபற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. இ. தமிழரசன் : தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் நிறைய இருக்கிற ஜபுனுமுத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து, பேரணம்பட்டு, மாதூர், ஆலங்காயம், நாட்டராம்பள்ளி ஆகிய பஞ்சாயத்துக்களை அதிலே இருந்து பிரித்தெடுத்து, வாணியம்பாடி ஒன்றியமாக ஆக்குவதற்கான பல நடைமுறைத் திட்டங்கள் நடத்தப்பட்டு, அரசின் பார்வைக்கு வந்திருக்கிறது. அது ஏதோ சில காரணங்களுக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம். எனவே, அந்த முயற்சி எந்த அளவில் இருக்கின்றது ? அவ்வாறு உடனடியாக மாற்றும் திட்டம் இந்த அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அது ஊரக வளர்ச்சி இயக்குநரின் ஆய்வில் இருக்கிறது.

திரு. ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டைமான் : புதுக்கோட்டை ஜில்லாவில் திருவரங்கம் பஞ்சாயத்து யூனியனை மூன்றாகப் பிரிப்பதாக ப்ரொபோசல் அனுப்பியிருக்கிறார்கள். அதை எப்போது பிரிக்கப்போகிறார்கள் ? அந்தப் பஞ்சாயத்து யூனியனில் 110 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. ஆகவே, அதை நான்காகப் பிரிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதை மூன்று ஒன்றியங்களாகப் பிரிக்கிற கருத்துதான் அரசின் ஆய்வில் இருக்கிறது. தேர்தலுக்கு முன்னால் பிரிக்க வேண்டுமென்று அரசு விரும்புகிறது.

திரு. சோ. அழகர்சாமி : நெல்லை மாவட்டத்தில் விளாத்திகுளம், ஒட்டைப்பிடாரம், கயத்தாறு ஆகிய யூனியன்கள் 50, 60 ஊராட்சிகள் கொண்ட யூனியனாக இருக்கின்றன. அவற்றைப் பிரிப்பது பற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அது போன்ற பரிந்துரை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் மூலமாக அரசுக்கு அனுப்பி வைக்கப்படுமானால் பரிசீலிக்கப்படும்.

1978 மார்ச் 9]

திரு. க. இரா. சின்னராசு: தர்மபுரி மாவட்டத்தில் ஊற்றங்கரை பஞ்சாயத்து யூனியனை இரண்டாகப் பிரித்து சாம்பல்பட்டி யூனியனை ஏற்படுத்த அரசாங்கம் பரிசீலிப்பதாகக் கூறப்படுகிறது. அது எப்போது பிரிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அந்தக் கருத்துரை ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரிடத்திலிருந்து அரசுக்கு வந்த பிறகு யோசிக்கப்படும்.

*474 Q.—THIRU K. KANDASAMY: Will the Hon. the Minister for Local Administration be pleased to state

(*a*) whether a resoultion was passed by the Panchayat Union, Andipatti, Madurai district and sent to the Government for the bifurcation of this Union into two viz., Andipatti Union and Kadamalaikkundu Panchayat Union as early as in 1968; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு தி. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிக்கும் கருத்து மதுரை மாவட்ட ஆட்சியாளரின் பரிசீலனையில் உள்ளது.

*475 வினு—திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தின் ஊராட்சிகளின் வளர்ச்சியைக் கருதி இரண்டாகப் பிரிக்கப்படுகின்ற கருத்து அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த ஆணைகள் எப்போது பிறப்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

*476 வினு—திரு. கா. வே. கந்தசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியம், பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியம், இவ்விரண்டையும் இணைத்து மூன்ருகப் பிரிக்கத் தீர்மானம் ஏதும் வந்துள்ளதா?

TRUTH ALONE TRIUMPHS